**நஷனல் ஸ்கூல் ஒவ் பிஸ்னஸ் மனேஜ்மென்ட் லிமிட்டட் - 2016**

---

நஷனல் ஸ்கூல் ஒவ் பிஸ்னஸ் மனேஜ்மென்ட் லிமிட்டட்டின் ("கம்பனி") 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நஷனல் ஸ்கூல் ஒவ் பிஸ்னஸ் மனேஜ்மென்ட் லிமிட்டட்டின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 517,449,033 வரிக்கு முன்னரான தேறியலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 88,976,022 வரிக்கு முன்னரான தேறியலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 428,473,011 ஆன வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது. வருமானம் ரூபா 59,643,830 ஆல் குறைவடைந்தமை மற்றும் பதவியணிக் கிரயம், விளம்பரப்படுத்தல் செலவினங்கள் மற்றும் வட்டிச் செலவினங்கள் என்பன ரூபா 275,340,606 ஆல் குறைவடைந்தமை என்பன இந்த பின்னடைவிற்கான பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டின் போது வரிக்கு முன்னரான தேறியலாபம் குறைவடைந்திருந்த போதிலும் ஊழியர் சம்பளங்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை கணக்கிற்கு எடுத்ததன் பின்னர் கம்பனியின் பெறுமதிச் சேர்க்கை ரூபா 790,921,768 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் பெறுமதிச் சேர்க்கை ரூபா 1,059,019,611 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

உலக தரத்திலான கல்வி, பயிற்சி, அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சியை வழங்குதல் மற்றும் இலங்கையிலுள்ள மாணவர்கள் மற்றும் நிறுவகங்களில் படிப்படியாக தோன்றும் தேவைகளை ஆற்றுவதற்கான கல்விசார் உற்பத்திகள் மற்றும் சேவைகள் மற்றும் வழங்கும் முறைகளில் புதியனவற்றை உட்புகுத்துதல் என்பன கம்பனியின் பிரதான நோக்கங்களாகும். எவ்வாறாயினும், பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் (கேபீஐஎஸ்) மீதான வருடாந்த இலக்குகள் கம்பனியால் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளுடன் உள்ளபடியான செயலாற்றலை ஒப்பீடு செய்வதற்கு கணக்காய்வில் முடியாதிருந்தது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முக்கிய சில பரப்புக்களிலுள்ள கம்பனியின் செயன்முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| பரப்புக்கள் | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| கற்கைநெறிகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் | 381,848,973 | 582,371,274 | 782,648,252 | 1,138,195,911 | 1,078,552,000 |
| விளம்பரப்படுத்தலிற்காக ஏற்பட்ட செலவினம் | 972,805 | 6,204,841 | 5,186,354 | 7,961,906 | 60,970,240 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | 2,212 | 2,364 | 1,979 | 2,080 | 2,617 |

**4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்**

ஏறத்தாழ 30,000 மாணவர்களிற்கு வசதிகளை வழங்குவதற்கான இயலளவுடன் ரூபா 8.6 பில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் 2016 ஒக்தோபர் 16 இல் திறப்பதற்கு வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு கல்வி பயிலும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 7,168 மாத்திரமேயாகும். ஆகையால் கம்பனியிலுள்ள அதிகமான கட்டிட வசதிகள் நீண்டகாலமொன்றிற்கு பயன்படுத்தப்படாதிருந்தது.

*இது தொடர்பில் ''ஏறத்தாழ 30,000 மாணவர் வதிவதற்கான கட்டிடங்களை நிர்மாணிக்கும் மூலத்திட்டமானது பத்து ஆண்டுகளில் 2025 ஆம் ஆண்டின் இறுதியில் அடையப்படுவதற்கு இலக்கிடப்பட்டது. எதிர்வுகூறப்பட்ட எண்ணிக்கைகளின் பிரகாரம், என்எஸ்பீஎம் ஆனது 2021 ஆம் ஆண்டில் 20,000 மாணவர் எண்ணிக்கையை அடைவதற்கு இலக்கிடுகின்றது'' எனக் கம்பனியின் உபவேந்தர் குறிப்பிட்டிருந்தார்.*

**4.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு கம்பனியின் உள்ளபடியான பதவியணியினர் 54 ஆக இருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டம் என்பன கம்பனியில் காணப்படவில்லை.

(ஆ) கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியின் சம்பளமானது 2016 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 2016 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 50 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2003 யூன் 02 பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பந்தியின் பிரகாரம் பொதுத் திறைசேரியிடமிருந்து அவற்றின் மீதான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. குறிப்பிட்ட சில உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றங்கள் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை விஞ்சி வழங்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டமையால் இது தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | கணனி முறைமையில் ஆண்டிற்கான பெறுவனவுகள் மற்றும் வருமானங்களை தனித்தனியாக இனங்காண்பதற்கான வசதி காணப்படாமையால் சீராக்கல் பதிவுகளை கைமுறையாக மேற்கொள்ள வேண்டியிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | காசு முகாமைத்துவம் | காசுப் பெறுவனவுகள், வைப்புக்கள், பதிவேடுகளை பேணுதல் மற்றும் இணக்கம் செய்தல் தொடர்பான கடைமைகளை பிரிப்பதற்கு முறையான நடைமுறையொன்று காணப்படாமை |
| (இ) | இருப்புக் கட்டுப்பாடு | (i) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறைமையில் காட்டப்பட்ட இருப்பு மீதிகளிற்கும் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்ட மீதிகளிற்கும் இடையில் முரண்கள் காணப்படுதல். முறைமையானது முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்காதமை மேலும் அவதானிக்கப்பட்டது.<br><br>(ii) கம்பனியின் நிதிக் கையேட்டின் பிரகாரம் இருப்புப் பதிவேடு பேணப்படாமை. |